முருகப்பெருமான் துணை

**மகான் கருவூர் தேவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.10.2022**, சனிக்கிழமை

1. தவசியே அவதாரம் நிகழ்த்தி
   தமிழகம் தன்னை அகிலமே
   அவசியம் வியந்து நோக்கிட
   அற்புதம் நிகழ்த்தும் அரங்கனே
2. அரங்கனே உன் அனுகூலம் தன்னை
   அகிலமே அடைய வேண்டி
   வரங்களென சுபகிருது தரிவை திங்கள்
   வல்லமைபட எழுநான்கு திகதி காரி வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28 ம் நாள் 15.10.2022, சனிக்கிழமை)
3. வாரமதில் அனுகூலஆசிதனை
   வழங்குவேன் கருவூர்தேவர் யானும்
   பாரதம் யாவும் இந்தப் பண்பு
   பரோபகாரமாக தயவாகப் பெருக
4. பெருகவே ஞானியர் நடத்தும்
   பிரணவ சக்திமிக்க அற்புதம்
   தருமமாகப் பரவி வருக
   தரணியோர் ஏற்றுத் தொடர
5. தொடரவே இந்தியா தமிழகம் என
   தொடர்ந்து அகிலம் எங்கிலும்
   இடரின்றி பரவிச் சிறந்து
   எங்கும் தருமபலம் பெருகி
6. பெருகியே அரங்கனின் ஞானம்
   பிரணவ சூட்சுமமாக நிரம்பி
   பேருலகம் பாதுகாப்பை பெறும்
   பிணி சோடை பேரிடர் அழிவுப் பற்றா
7. பற்றாத வண்ணம் உலகமே
   பாதுகாப்பு மிகுதி கண்டு
   ஆற்றல்பட வளர்ச்சிக் காணும்
   அமைதி நிறைவும் பெருகி
8. பெருகியே ஞானவான்கள் கூடிய
   புகலுவேன் தலைமை கண்டு
   தரும ஞான ஆட்சியாக
   தரணியே மாற்றம் காண்கும்
9. காண்கவே அரங்கன் அவதாரம்
   கந்தப் பெருமான் ஞானம்
   உண்மை வழி கண்டு வந்தநல்
   உலகமக்கள் எல்லாம் தேறி

10. தேறியே ஞானிகள் ஆவர்
தெய்வபலம் குன்றாதபடி
அறிவுத் தெளிவு அருளும் கூடி
ஆனந்த ஞான வாழ்வு காண்பர்
11. காண்கவே அரங்கனால் மாற்றம்
கலியுகம் கண்டிட இருக்க
நன்மைபெற பிரணவக் குடிலதனை
நாடிவர சகலருக்கும் ஞானம்கிட்டும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–